**தலைப்பு 102 – நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

#### 2.1.1 நிதியேற்பாட்டின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 35 செலவின விடயங்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 18,475,000 ஆன மொத்த தேறிய நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | மூலதன செலவினங்கள் வரையறுத்தமை, பொருளாதார கொள்கை மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சு, அபிவிருத்தி இணைப்புக்கள் மற்றும் மேற்பார்வை அமைச்சு மற்றும் முதலீட்டு மேம்படுத்தல் சபை கலைக்கப்பட்டு இந்த அமைச்சிற்குரிய நிதியேற்பாடு கையளித்தல் மற்றும் எதிர்பார்த்த பிரகாரம் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு 36 செலவின விடயங்களுக்காக 2022 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 274,472,366 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 195,555,743 தொகை பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. சேமிப்பு அந்த செலவின விடயங்களின் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 51 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவின தேவைகள் எழாமை, 02 அமைச்சுக்கள் கலைக்கப்பட்டு அந்த அமைச்சின் நிதிஏற்பாடு கையளித்தல், போதியளவான பிரகாரம் கட்டுநிதி கிடைக்காமை மற்றும் எதிர்பார்த்த பிரகாரம் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை. | நிதியேற்பாட்டை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் அரச செலவினங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் வரையறை தொடர்பான சுற்றறிக்கை ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த செலவின விடயங்களின் சேமிப்பின் அளவு கவனத்தில் கொள்ளக் கூடியளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டமை. | | |
| (இ) | 03 செலவின விடயங்களுக்காக ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாட்டை கவனத்தில் கொள்ளாமல் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 102,200,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் கூட்டு மொத்தமாக ரூபா 90,258,499 மாத்திரம் செலவிடப்பட்டு மொத்தமாக ரூபா 11,941,501 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் மீள்கட்டமைப்பு அலகு ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் தாமதம் அடைந்தமை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாகவும் பொருத்தமாகவும் தயாரித்தல் வேண்டும். |

### 2.1.2 அமைச்சின் அலகுகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க நிறுவனம் மற்றும் அமைச்சின் 08 பிரிவுகளுக்கு செலவினங்களை செய்வதற்காக 2022 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 440,300,000 ஆன தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 352,362,212 தொகை அதாவது 41 – 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பிற்கு காரணமாக உத்தியோகத்தர் நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டமை, உடன்படிக்கை திருத்தம், உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்காமை, கட்டுநிதி வழங்கப்படாமை, மற்றும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம் ஆக காண்பிக்கப்பட்டமையினால் அந்த பிரிவுகளின் மற்றும் | மீள்கட்டமைப்பு அலகு ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் தாமதம் அடைந்தமை, சேவை வழங்குகின்ற நிறுவனங்களுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை திருத்தங்கள், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை, போதியளவான பிரகாரம் கட்டுநிதி பெறப்படாமை, செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம், பதவியணியினரை சேர்த்துக்கொள்ள முடியாமை, எரிபொருள் நெருக்கடியின் காரணமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு முடியாது இருந்தமை. மற்றும் அங்கீகரிக்கப்பட்ட | அரசாங்க நிறுவனம் மற்றும் அலகுகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு செயற்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களில் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாது இருந்தது. | பதவியணியினர் சேர்க்காமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாது இருந்தது. | |

**2.2 அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் முற்பணம் செலுத்துதல் மற்றும் தீர்த்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் 04 பேர்களிடமிருந்து 05 வருடம் முதல் 18 வருடங்கள் வரையிலான காலத்தில் விஞ்சிய அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 480,861 மற்றும் 3 – 12 மாதங்களுக்கு இடையிலான கால வீச்சில் அறவிட வேண்டிய ரூபா 119,073 கடன் மீதிகள் ஆக கூட்டுமொத்தம் ஆக ரூபா 599,934 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சிற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. | இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு சட்டமா திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் பணத்தின் பிணையாளர்களுக்கு கடன் பணத்தை தீர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதி தீர்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதி அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி பிரிவில் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 3,522,356 ஆகும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவை மீதி அமைச்சிற்கு அறவிடப்படாது இருந்ததுடன் 2023 ஏப்ரல் 21 ஆந் திகதி வரை 67,718 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் தவணைப் பணமாக அறவிட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதி புத்தகங்களில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதி அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 1-2 வருட காலப்பகுதியை விஞ்சிய நிலுவைக் கடன் மீதி ரூபா | 2023 ஆம் ஆண்டின் போது தவணைப் பணமாக அறவிடப்படும். | நிலுவை கடன் மீதி அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

170,562 ஆகும். இந்த கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சிற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த அறவிட வேண்டிய கடன் மீதியில் 2023 ஏப்ரல் 21 ஆந் திகதி வரையில் ரூபா 5,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயல்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி, பொருளாதர ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் 2022 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட திறைசேரி விசேட பணிகளுக்குரிய செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சகல திறைசேரி திணைக்கள செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் நடைமுறையில் காணப்பட்ட நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்காக நிதி செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான செயல் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் தாபன பிரிவினால் நிதி அமைச்சின் கீழ் உள்ள பொது முயற்சிகள் மற்றும் நிதியத்தின் மேற்பார்வை, வழிகாட்டல், நிர்வாகம் மற்றும் உச்ச அளவிலான செயலாற்றலை உறுதிப்படுத்தல், நிதி அமைச்சின் கீழ் உள்ள அரச தொழில் முயற்சிகளின் நிதியம் மற்றும் திணைக்களம் தொடர்பான பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளல், நிதி அமைச்சு மற்றும் அந்த திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களை மேற்பார்வை செய்தல். போன்ற பணிகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு | பொது முயற்சிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மீள் கட்டமைத்தல் விசேட நடவடிக்கை எடுப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன். அந்த செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ITMIS மற்றும் E-GP செயற்திட்டங்களில் மேலும் தேவைகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. வியாபார மற்றும் முதலீட்டுக்காக வசதிகளை வழங்குவதற்கு உரிய திணைக்களத்தின் மூலம் பணி நடைமுறைகளை இலகுபடுத்துவதற்காக விசேட | மீளாய்வாண்டிற்குரிய நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளை மற்றும் அது தொடர்பான செயல் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதன் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கையில் காணபிக்கப்படவில்லை. | வசதிகளை வழங்குதல் மற்றும் உத்தியோகத்தர்களின் அத்தியாவசிய பயிற்சியளித்தல் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தை உரிய பிரகாரம் நடாத்திச் செல்லும் நோக்கில் தேவையான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |

**3.1.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழ் உள்நாட்டு நிதியம் / வெளிநாட்டுக் கடன் / உதவியில் ஈடுபடுத்தி அமுல்படுத்துகின்ற சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் (SSNP) இற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 262 மில்லியனும், நிதி பிரிவினை நவீன மயப்படுத்தும் செயற்திட்டம் (FSMP) இற்காக கூட்டு மொத்தமாக ரூபா 204.15 மில்லியன் தொகையுமாக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளின் செயலாற்றல் மந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் (SSNP) இற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 79 சதவீதம் அதாவது ரூபா 207.61 மில்லியன் மற்றும் நிதிப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் (FSMP) இற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 192.20 மில்லியன் ஆக அந்த செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தின் போது உலக வங்கியினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் படி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுகின்ற திகதி வரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த சில நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையினால் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு செயற்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரிவை நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் Insurance Regulated Commission of Sri Lanka (IRCL) இற்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 143,150,000 தொகையில் ரூபா 105,000,000 தொகை அதாவது மதிப்பீட்டு | மதிப்பீடு செய்யப்பட்ட உரிய செலவின தலைப்பு (102–2-3-3-2509-31/12) இற்காக எதிர்பார்த்த செலவினங்கள் எழாமையின் காரணமாக அந்த செயற்திட்டம் ஏனைய தேவையான செலவினத் | செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு செயற்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதியேற்பாட்டில் 73 சதவீதம் உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் நிதிப்பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தில் ஏனைய நிறுவனமான Security Exchanged Commission (SEC) இற்கு மாற்றப்பட்டிருந்தது. | தலைப்பிற்கு நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | |

**3.2 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | பொதுத் திறைசேரி கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்காக ரூபா 15,698,375 தொகையான பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் திறந்த கூறுவிலை கோரி ரூபா 12,732,080 கிரயத்தில் (வரி இன்றி) ஒப்பந்த கையளித்து 2022 மே 05 ஆந் திகதியளவில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8,418,434 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | கேள்வி பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டினை விட 20 சதவீதம் குறைவாக காணப்பட்டமையால் 2021 சனவரி 11 ஆந் திகதிய இலக்கம் 03/2020(i) என்ற அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் ICTAD நிறுவனத்தால் விநிகோகிக்கப்பட்ட ஆலோசனைக் கோவையின் ITB 34:2 பிரிவின் பிரகாரம் செயலாற்றல் காப்புறுதி 15 சதவீதமாக இருத்தல் வேண்டும். அமைச்சினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 15 சதவீத செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி 01 முதல் 2022 ஆகஸ்ட் 12 வரை 5 சதவீதம் மாத்திரம் ஆகும் வகையில் செயலாற்றல் காப்பீடு பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிணைமுறி காலத்தை மேலும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென தயவுடன் அறியத்தருகின்றோம். | அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் ICTAD இனால் விநியோகிக்கப்பட்ட ஆலோசனையின் படி செயலாற்றல் காப்புறுதி பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) உரிய ஒப்பந்தம் 2021 யூலை 16 ஆந் திகதி பூர்த்தி செய்து கையளிக்க வேண்டிய போதிலும் ஒப்பந்தகாரால் 2021 திசெம்பர் 10 வரை நீடித்தல் கோரப்பட்டிருந்த போதிலும் நீடிப்பதற்காக ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடிய மட்டத்தில் காணப்படாதிருந்ததாக ஆலோசனை நிறுவனம் அறிவித்திருக்கும் போது ஒப்பந்த காலம் 2021 திசெம்பர் 10 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆலோசனை நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள இணக்கப்பாட்டின் அடிப்படையில் நீடித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ள கூடிய காரணங்களில் மாத்திரம் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஒப்பந்த காலம் 2021 திசெம்பர் 10 ஆந் திகதியின் பின்னர் நீடிக்கப்படாமல் இருந்ததுடன் பின்னர் 2022 பெப்ரவரி 28 வரையும் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையின் 49.1 பிரிவின் பிரகாரம் 2022 பெப்ரவரி 28 வரை தாமதக் கட்டணமாக ரூபா 1,018,566 அறவிட வேண்டியிருந்த போதும் அமைச்சு அதன் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்.**

**3.3.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சின் 2022 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அமைச்சிற்குரிய 06 பிரிவுகளின் கிரயம் ரூபா 2,111,801 பெறுமதியான பொருட்களின் மிகை இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றை முறையான பிரகாரம் பொருட்பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்காக உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மிகை பொருட்களை பொருட் பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3.2 வாகனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் போக்குவரத்துப் பிரிவு பேணிச்சென்ற வாகனப் பதிவேட்டின் பிரகாரம் அமைச்சிற்கு சொந்தமான 29 வாகனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அவை முறையான பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வாகனங்களை முறையான பிரகாரம் வழங்குவதாயின் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களின் அளவு குறைவடைவதுடன் அந்த வாகனங்கள் அமைச்சின் தேவையின் அடிப்படையில் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்குமென அறியத்தருகின்றோம். | முறையான பிரகாரம் கையளிப்பதற்கு அல்லது மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திசம்பர் 31 ஆந் திகதி வரையில் CIGAS கணனி மென்பொருள் முறைமையில் SA 82 கணனி அச்சிடல் குறிப்பில் சொத்து நிரலின் (Asset List) பிரகாரம் வாகன இலக்கம் மற்றும் அதற்குரிய கிரயம் தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தமையால் அமைச்சிற்குரிய மொத்த வாகனங்களின் எண்ணிக்கை கணனி அச்சிடல் குறிப்பின் மூலம் குறிப்பாக இனங்காண முடியாமல் இருந்தது. மேலும் அமைச்சின் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு பேணிச் செல்லப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டின் படி வாகனங்களின் கிரயம் ரூபா 692,869,000 ஆக இருந்ததுடன் CIGAS கணனி அச்சிடலில் (SA-82) இன் பிரகாரம் அது ரூபா 1,832,801,692 ஆனமையால் ரூபா 1,131,932,692 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | CIGAS கணனி மென்பொருள் முறைமையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | கணனி அச்சிடல் குறிப்பில் சொத்துக்கள் நிரலின் பிரகாரம் வாகன இலக்கம் மற்றும் அதற்குரிய கிரயம் இனங்காணக் கூடிய வகையில் திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். |

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020.08.09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க, 2021.10.06 ஆந் திகதிய 2248/35 ஆம் இலக்க மற்றும் 2021.11.17 ஆந் திகதிய 2254/30 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் மூலம் கலைப்பதற்கோ அல்லது ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைப்பதற்கோ குறித்துரைத்த மின்சார குறியீட்டு திணைக்களம், வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் இலங்கை ஊடகவியலாளர் பயிற்சி நிறுவனம் நிதியமைச்சின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனை கலைக்க வேண்டிய அல்லது ஒன்றிணைக் வேண்டிய நிறுவனம் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளுக்காக நான்கு உத்தியோகத்தர்களையுடைய குழு ஒன்று 2021 திசெம்பர் 27 ஆந் திகதி நியமிக்கப்பட்ட போதும் உரிய நிறுவனத்தை கலைத்தல் தொடர்பாக 2021 ஒக்டோபர் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்த போதிலும் உரிய நிறுவனங்களை கலைப்பதற்கோ அல்லது ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளோ பூர்த்தி செய்து சட்டரீதியாக மூடுவதற்காக உரிய வர்த்தமானி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சார குறியீட்டு திணைக்களத்திற்காக வர்த்தமானி அறிவித்தல் வரைவு, வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பிற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் விசாரணை செய்தல், இலங்கை ஊடகவியலாளர் பயிற்சி நிறுவனத்தின் இறுதிக் கணக்கு அறிக்கை தயாரித்தல் தொடர்பாக கோரி கடிதம் அனுப்பபட்டுள்ளது. | அமைச்சின் விடயப்பரப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த, கலைக்க வேண்டிய நிறுவனம் தொடர்பாக நடவடிக்கையை பூர்த்தி செய்து சட்டத்தின் பிரகாரம் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் படி ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) 55 ஆவது வருடாந்த மாநாட்டிற்காக பங்குபற்றுதல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி அமைச்சரவை | உடன்படிக்கையின் பிரகாரம் சர்வதேச மாநாட்டை ஒழுங்கமைக்கும் நிறுவனம் (Professional Congress Organizer) இற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தவிர ஏனைய சகல செலவினங்களும் மாநாட்டிற்கான செலவிடப்பட்ட செலவினமாக | நிதியை செலவிடும் போது சிக்கனமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது, அதற்குரிய பணிகளை ஒழுங்கமைத்துக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) மற்றும் கிரயங்களை பகிர்ந்துகொள்ளும் உடன்படிக்கை (CSA) கைச்சாத்திடுவதற்கு 2021 யூலை 27 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதற்குரிய செலவினம் செய்யப்பட்டிருந்தது. எனினும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த கூட்டம் எதிர்வரும் வருடத்திற்காக காலம் தாழ்த்துமாறு கோரி ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு முறையான அறிவித்தலொன்றை வழங்குவதற்கு 2022 ஏப்ரல் 16 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தமையால் மாநாட்டினை நடாத்துவதற்குரியதாக அதுவரை செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 115,264,619 செலவினம் இலங்கை அரசாங்கத்திற்கு சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டின் போது மாநாட்டை இந்த நாட்டில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்படுமாயின் அதற்கான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின் போது இந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப திட்டங்கள் உதாரணம்:- Web page, Registration app, …. போன்றவற்றுக்கு முடியுமான வகையில் பேணிச்செல்லப்படுகின்றது. அவ்வாறே உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த அனுபவத்தின் பிரகாரம் மாநாட்டு நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் ஆரம்ப மட்டத்தில் இல்லாமல் இரண்டாம் நிலையில் நடாத்திச் செய்து கொள்ளும் இயலுமை காணப்படும் என கருதுகின்றோம். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அமைச்சின் ஒட்டு மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 61 ஆக இருந்ததுடன் அதில் சிரேஷ்ட நிலையில் 27 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 17 வெற்றிடங்களும் காணப்பட்டது. | இந்த அமைச்சின் பதவிகளை அங்கீகரித்தல் அமைச்சின் கீழ் ஸ்தாபிப்பதற்கு குறித்த வருமான முகாமைத்துவ அலகிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை உள்ளபடியான எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது கணிசமான வெற்றிடங்களின் எண்ணிக்கை காண்பிக்கப்படுகின்றமையாலும் மற்றும் அமைச்சின் பதவிகளின் | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாமல் தனியான அங்கீகாரம் ஆக கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதனாலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதியமைச்சின் சம்பளம் செலுத்தி ஏனைய நிறுவனங்களின் சேவைக்காக சேவைக்காக விடுவிக்கப்பட்ட 09 உத்தியோகத்தர்களுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்பளம் மற்றும் படியாக கூட்டுமொத்தமாக ரூபா 2,554,077 செலுத்தப்பட்டிருந்தது. | சனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் போன்ற நிறுவனங்களில் அந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற சேவை தேவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த உத்தியோகத்தர்களை மீண்டும் அமைச்சிற்கு விடுவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | சேவையாற்றுகின்ற நிறுவனங்களில் சம்பளம் மற்றும் படிகளை வழங்குவதற்கு முடியுமான வகையில் முறையானதாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |